செய்தி வெளியீடு எண்.456/2010 நாள்: 22.6.2010

தமிழ்நாடு சட்டப் பேரவை மனுக்கள் குழு அதன் தலைவர் திரு. கோவை தங்கம் அவர்களின் தலைமையில் 30.06.2010 புதன்கிழமை வேலூர் மாவட்டத்திற்கு வருகை தர உள்ளது. மேற்படி தேதியில் பிற்பகல் 3.00 மணியளவில் வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் 5-வது மாடியில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோர் முன்னிலையில் தமிழ்நாடு சட்டப்பேரவை மனுக்கள் குழு (2009-2011) கூடி வேலூர் மாவட்டத்திலிருந்து பெறப்பட்டுள்ள மனுக்கள் மீது அரசுத்துறை அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட அறிக்கைகளை ஆய்வு செய்கிறது. மேலும் 28.8.2008ம் நாளன்று வேலூர் மாவட்டத்தில் நடைபெற்ற மனுக்கள் குழுவினரால் கூட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்ட வேலூர் மாவட்டம் தொடர்பான மனுக்கள் மீது சம்மந்தப்பட்ட துறைகளால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மறு ஆய்வு மேற்கொள்கிறது. மேற்படி சட்டமன்ற மனுக்கள் குழு ஆய்வு கூட்டத்திற்கு வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து துறை அலுவலர்களும் கலந்துக் கொண்டு மனுதாரர்களுக்கான பதில்களை குழு முன்பாக எடுத்துரைக்கின்றனர். சம்பந்தப்பட்ட மனுதாரர்கள் அனைவரையும் மேற்படி குழு கூட்டத்திற்கு வருகை புரிந்து துறை அலுவலர்கள் அளிக்கும் பதில்களை நேரில் பெற்றுக்கொள்ள அழைப்பாணை தனியாக அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி குழு கூட்டத்தில் வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்துக் கொள்கின்றனர்.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர் - 9.